# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| **In the Court of** | **:** | District Munsif – cum – Judicial Magistrate Court, Pennagaram. |
| **Case No.** | **:** | CC No.149/2022 |
| **Prosecution Witness** | **:** | PW - 1 |
| **Date** | **:** | 21.02.2025, 11.50 AM |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | லட்சுமி | **Cast** | : | |
| **Father's Name** | : | பெருமாள் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

( Accused present).

## வாக்குமூலம்

| | | |
|---|---|---|
| நீதிமன்றம் | **:** | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம். |
| வழக்கு எண். | **:** | ஆ.ப.எண். |
| வழக்கு சாட்சி | **:** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(எதிரி ஆஜர்)

அரசு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார்.

## முதல் விசாரணை

நான் பென்னாகரம், கூத்தப்பாடி மடம் கிராமத்தில் வசித்து விவசாய கூலிவேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 15.03.2022ம் தேதி அன்றைய தினம் நான் தோட்டத்திற்கு சென்று வேலை செய்துவிட்டு மதியம் 12.00 மணியளவில் எனது வீட்டிற்கு வந்தேன். ஆஜர் எதிரி நான் வீட்டிற்குள் காலை எடுத்துவைக்கும் போதே என்னை பின்தொடர்ந்து வந்து வாயை பொத்தி

கழுத்தை நெறித்து காசு, பணம் எங்கு வைத்திருக்கிறாய் என்றுகேட்டு எனது இடதுபக்க கன்னத்தில் அறைந்தததில் எனது காதில் இரத்தம் வந்தது. தோடு உடைந்துவிட்டது. எனது வீட்டில் நாய் குரைத்த சத்தம் கேட்டு அங்கம் பக்கத்தில் குடியிருந்து மூர்த்தி, மகேஷ், அற்புதம் ஆகியோர் மூவரும் வந்தார்கள். அவர்கள் ஓடிவருவதை பார்த்து ஆஜர் எதிரி ஓடிவிட்டார். அருகில் இருந்தவர்கள் என்னை பார்த்து ஆசுவாசப்படுத்தி தண்ணீர் கொடுத்தனர். அருகில் இருந்தவர்கள் எனது கணவருக்கு தகவல் கொடுத்தனர். சம்பவம் குறித்து ஒக்கேனக்கல் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். எனது வீட்டை சுற்றி பொருத்தப்பட்டுள்ள கேமராவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறேன். சிசிடி கேமரா பதிவுகளை முன்னிலைப்படுத்தவேண்டி அரசு தரப்பில் காலஅவகாசம் கோரிய நிலையில் முதல் விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.